tamilguru.lk

# இலங்கைப் புகையிரத திணைக்களம்

## இரத்மலானை இலங்கை ஜேர்மன் புகையிரத தொழில்நுட்பப் பயிற்சி நிலையம் பயிலுநர்களை சேர்த்துக்கொள்ளல் - 2023

*இரத்மலானை இலங்கை ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்கு 2023 ஆம் வருடத்திற்காக பயிலுநர்களை சேர்த்துக்கொள்வதற்காக இதில் 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த தராதரங்களை உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

2. **குறைந்த தராதரம்** :

(அ) வயது : 2023.07.14 ஆந் திகதியன்று 16 வயதுக்கும் 26 வயதுக்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித் தராதரம் : க. பொ. த. (சா./த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம், மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட ஆறு (06) பாடங்களில் ஏதேனும் நான்கு (04) பாடங்களுக்கு திறமைச் சித்திகளோடு ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

3. **பயிற்சிநெறி.-** பயிலுநர் பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்படும் பயிலுநர்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் மற்றும் அத் தொழிலுக்குரிய காலவெல்லைக்கு உட்பட்டு பயிற்சி நெறியை கற்பதற்கு இடமளிக்கப்படும். பயிற்சி நெறி சிங்கள மொழியில் மாத்திரமே நடாத்தப்படும். கீழ்க் குறிப்பிடப்படும் பயிற்சி நெறிக்காக பயிலுநர்கள் 25 பேர் வீதம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

| | | |
|---|---|---|
| (i) | டீசல் என்ஜின் இயந்திரவியலாளர் | - 03 வருடம் (NVQ Level 04) |
| (ii) | ஒட்டுநர் | - 03 வருடம் (NVQ Level 04) |
| (iii) | மின்னியலாளர் (சக்தி) | - 03 வருடம் (NVQ Level 04) |
| (iv) | இயந்திரவியலாளர் (பொது) | - 03 வருடம் (NVQ Level 04) |

tamilguru.lk



04. **விண்ணப்பம்.**- விண்ணப்பதாரிகளினால் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப (ஏ-4) அளவுள்ள கடதாசியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் பூரணமான விபரங்கள் சரியான முறையில் குறிப்பிடப்படல் வேண்டும். தேவையான தகவல்கள் உள்ளடக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

05. **பயிற்சி நெறிக்குத் தேர்ந்தெடுத்தல்.**-

(1) எழுத்து மூல மற்றும் தொழில் பரிசோதனை மூலம் மேற்கொள்ளப்படுவதுடன், தேவையான குறைந்த தராதரத்தையுடைய மற்றும் 07 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணம் செலுத்திய விண்ணப்பதாரிகள் மாத்திரம் எழுத்து மூல பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

(2) எழுத்து மூலப் பரீட்சை கணிதம், அடிப்படை தொழில்நுட்ப அறிவு, மற்றும் பொது அறிவுடன் நுண்ணறிவுகளை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படும். எழுத்து மூலப் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் தொழில் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

(3) எழுத்துமூல மற்றும் தொழில் பரீட்சைகளில் கூடிய முழுப் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் அந்தந்தப் பயிற்சி நெறிகளுக்காக தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

06. **பரீட்சை மொழி மூலம்.**- விண்ணப்பத்தின் படி பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

07. **பரீட்சைக் கட்டணம்.**- இப்பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணமாக மீளச் செலுத்தப்படாத ரூபா 1,000.00 அறவிடப்படும். புகையிரத பொது முகாமையாளரின் மக்கள் வங்கி நகர மத்திய கிளையின் கணக்கு இலக்கம் : 176-1001-2-9027313 வரவிலிடும் வகையில் எந்த மக்கள் வங்கி கிளையிலும் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும். (பற்றுச்சீட்டின் புகைப்பட பிரதியை தம்மிடம் வைத்துக்கொள்ளல் பிரயோசனமானதாக இருக்கும்) பற்றுச்சீட்டை இணைத்து அனுப்பாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். ஆட்சேர்ப்பு பரீட்சைக்குத் தோற்றாத காரணத்தினாலோ அல்லது வேறெந்த காரணத்தினாலோ பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது.

08. **பரீட்சை நிலையம்.**- சகல தேவைகளையும் பூரணப்படுத்திய விண்ணப்பதாரிகளுக்கு எழுத்து மூல பரீட்சை கொழும்பு நிலையமொன்றில் மாத்திரம் நடாத்தப்படும்.

09. **ஒப்பந்தம் கையொப்பமிடல்.**- நிறுவனத்தின் பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற சகல விண்ணப்பதாரிகளும் குறித்த பயிற்சி காலவெல்லைக்குள் பயிற்சியை சாதகமான முறையில் கற்பதற்காக இலங்கைப் புகையிரத திணைக்களத்துடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடல் வேண்டும்.

10. பயிற்சியின் பின்பு பயிலுநர்களுக்குத் தொழில் வாய்ப்பு வழங்க திணைக்களம் பொறுப்பேற்காது.

11. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையத் தயாரித்து "பிரதி புகையிரத முகாமையாளர் (பயிற்சி மற்றும் மனித வள அபிவிருத்தி), இலங்கை ஜேர்மன் புகையிரத பயிற்சி நிலையம், கல்தமுல்லை வீதி, இரத்மலானை" எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தையிட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இ. ஜே. பு. தொ. ப. நி. /2023" எனக் குறிப்பிடவும்.

12. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி :- விண்ணப்பம் 2023.07.14 ஆந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், தாமதித்து கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

டபிள்யூ. ஏ. டி. எஸ். குணசிங்க,
புகையிரதப் பொது முகாமையாளர்.

புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்,
த. பெ. 355, ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு - 10,
2023, யூன் 06.

## இலங்கைப் புகையிரத சேவைகள்
## இலங்கை ஜேர்மன் புகையிரத பயிற்சி நிலையத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2023

அலுவலக உபயோகத்திற்காக

01. முழுப்பெயர் :

சிங்களத்தில்/தமிழில் : ..........................................................................................................

ஆங்கிலத்தில் : ..........................................................................................................

02. முகவரி :

சிங்களத்தில்/தமிழில் : ..........................................................................................................

ஆங்கிலத்தில் : ..........................................................................................................

03. மாவட்டம் : ..........................................................................................................

04. பிறந்த திகதி : [ | | | ] [ | ] [ | ]

தேசிய ஆளடையாள அட்டை இல. : [ | | | | | | | | | | | ]

05. பால் : (ஆண்/பெண்) : ..........................................................................................................

06. தொலைபேசி இல. : ................................................ வாட்ஸ்அப் இல. (WhatsApp) : ................................................

மின்னஞ்சல் முகவரி (E-Mail address) : ......................................................................

07. கல்வித் தராதரம் :

க. பொ. த. (சா. தரம்) வருடம் : ............................. சுட்டெண் : .....................................

| இல. | பாடம் | பெறுபேறு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

08. விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : ..................................................................

09. பரீட்சைக்கட்டணம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு இங்கு ஒட்டவும்.

10. மேற் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் யாவும் உண்மையானவையெனவும், சரியானவையெனவும் நான் உறுதிப்படுத்துகிறேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களில் ஏதேனும் பொய்யானதென நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு தெரியவருமிடத்து அதற்கு நான் தகுதியற்றவராவதற்கும், தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்பு தெரியவருமிடத்து பயிற்சியிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

------------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

06-253